**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 95/2020**

பெயர் : நிர்மலாதேவி
சாட்சி – பி.வா.சா– 1                                                                நாள்: 05.03.2026

---

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பு)**

1. நான் தற்போது பல்லடம் ஜே கே ஜி காலனி புதிய கதவு எண் 89 ல் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் ஊத்துக்குளி அருகே காசிபாளையம் ஆகும். எனது தந்தை பெயர் முத்துசாமி. தாயார் பெயர் முத்துலட்சுமி ஆகும். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சங்கதிகளை எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனது எதிர் வழக்குரையில் எனக்கு திருமணம் நடந்ததாக சொல்லும் தேதியை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் திருமணம் நடைபெற்ற வருடத்தை குறிப்பிட்டுள்ளேன்.

2. கோவிந்தசாமி கவுண்டர் கள்ளிப்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர். அவரது தந்தை பெயர் அவிநாசியப்ப கவுண்டர் ஆகும். எனது கணவருடன் உடன் பிறந்தவர்கள் விஸ்வநாதன், பெரியசாமி, சந்திரசேகர் மற்றும் பாலாமணி ஆகியோர்கள் ஆவர். எனது கணவருடன் உடன் பிறந்தவர்களில் விஸ்வநாதன் மற்றும் பாலாமணி ஆகியோர்கள் மட்டும் உயிருடன் உள்ளார்கள். நீதிமன்றத்தில் வாதி ராதாகிருஷ்ணனை விசாரணை செய்யும் போது நான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன். வாதி தரப்பில் ராஜேந்திரன் என்ற சாட்சியை விசாரணை செய்யும் போதும் நான் வந்திருந்தேன். வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட ராஜேந்திரன் என்பவர் எனது கணவரின் சகோதரி பாலாமணி என்பவரின் மகன் ஆவார்.

3. கோவிந்தசாமியின் தாயார் பெயர் பழனியம்மாள் ஆகும். பழனியம்மாளின் உடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் ஆவார்கள். பழனியம்மாளின் சகோதரர் பெயர் முத்துச்சாமி ஆகும். சகோதரிகள் பெயர் தெய்வானை, லட்சுமி மற்றும் மற்றொருவர் பெயர் எனக்கு நினைவில் இல்லை. பழனியம்மாளின் சகோதரர் பெயர் வேணுகோபாலசாமி என்றால் நான் முத்துசாமி என்று

தான் கேள்விப்பட்டேன். வாதி தரப்பு சாட்சி ராஜேந்திரனின் தகப்பனார் வேணுகோபாலசாமி என்றால் சரிதான். மேற்படி வேணுகோபாலசாமி தான் பழனியம்மாளின் சகோதரர் என்றால் சரியல்ல.

4. எனக்கும் கோவிந்தசாமிக்கும் திருமணம் நடைபெற்றதாக எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர் ஒரு தம்பி மட்டும், அவர் பெயர் ராமசாமி ஆகும். எனக்கும் கோவிந்தசாமிக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றதாக சொல்கிறேன் என்றால் 11.04.1980 தேதியில் திருமணம் நடைபெற்றது. எதன் அடிப்படையில் நான் திருமண தேதியை சொல்கிறேன் என்றால் எனக்கு திருமணம் ஆன தேதி எனக்கு நினைவில் இருக்கும் அதன் அடிப்படையில் சொல்கிறேன். எனது எதிர் வழக்குரை மற்றும் முதல்விசாரணை சாட்சியத்தில் 11.04.1980 தேதியில் திருமணம் நடைபெற்றதாக ஏன் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் அவ்வாறு தயார் செய்துள்ளார்.

5. கோவிந்தசாமி எனக்கு எழுதி வைத்ததாக சொல்லும் வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதன் பேரில் நான் கடன் வாங்கி உள்ளதால் அங்கு கொடுத்துள்ளேன். நான் கடன் வாங்கி உள்ளதால் ஆவணத்தை கொடுத்துள்ளேன் என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு எதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமியின் மனைவி பர்வதம்மாள் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொல்லி உள்ளதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பர்வதம்மாள் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கள்ளிபாளையத்தில் இருந்தது நான் பார்த்துள்ளேன். நான் பார்த்ததாக சொல்லும் ஆவணத்தில் என்ன இருந்தது என்றால், அவருக்கு மருத்துவம் பார்த்ததாக இருந்தது. எந்த மருத்துவரிடம் காண்பிக்கப்பட்டது என்றால் எனக்கு நினைவில் இல்லை.

6. எனக்கு திருமணம் எங்கு நடைபெற்றதாக சொல்கிறேன் என்றால் பழனியில் கீழே உள்ள பாலதண்டாயுதபாணி கோவிலில் நடைபெற்றது. அப்போது யார் திருமணத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் எனது உறவினர்கள் மற்றும் அவரது உறவினர்களும் கலந்து கொண்டார்கள் வாதி ராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டார்.

வாதி தரப்பு சாட்சி ராஜேந்திரனும் கலந்து கொண்டார். அந்த சமயத்தில் பல்லடத்திலிருந்து பழனிக்கு செல்வதற்கு பஸ் வசதி அவ்வளவாக கிடையாது என்றால் யாரும் பஸ்ஸில் செல்லவில்லை காரில் தான் சென்றோம். பல்லடத்தில் இருந்து பழனி 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான்.

7. காரிலேயே பழனி சென்றாலும் கூட மூன்று மணி நேரம் குறைந்தபட்சம் ஆகும் என்றால் சரிதான். திருமணம் முடிந்தவுடன் பழனியில் இரண்டு மூன்று மணி நேரம் இருந்தோம் அதன் பின்னர் கள்ளிப்பாளையம் வந்து விட்டோம். கள்ளிப்பாளையம் வரும்போது மாலை 5 மணி இருக்கும். திருமணத்தில் உறவினர்கள் யார் யார் கலந்து கொண்டார்கள் என்று எனது எதிர்வழக்குரை மற்றும் முதல்விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உறவினர்கள் யார் யார் கலந்து கொண்டார்கள் என்று ஏன் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் காரணம் எதுவும் இல்லை.

8. பொதுவாக இந்து திருமணங்கள் சுப முகூர்த்த நாட்களில் தான் நடக்கும் என்றால் சரிதான். அஷ்டமி மற்றும் நவமி நாட்களிலும் திருமணம் நடக்காது என்றால் சரிதான். அந்த காலத்தில் தேய்பிறை நாட்களில் திருமணம் நடக்காது என்றால் சரியல்ல. கோவிந்தசாமி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு உண்டான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் என் உடன் வைத்துள்ளேன் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். கோவிந்தசாமி நோய்வாய் பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. கோவிந்தசாமி என்னுடன் தான் வசித்து வந்தார் என்று காண்பிப்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அந்த காலத்தில் வங்கியில் கணக்கு தொடங்க அடையாள அட்டை தாக்கல் செய்ய வேண்டுமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.4 சேமிப்பு கணக்கு புத்தகத்தில் 11/பி2, ஜே கே ஜே காலனி என்று உள்ளது என்றால் சரிதான். அது பழைய கதவு எண் ஆகும் புதிய கதவு எண் 89 ஆகும். பி.வா.சா.ஆ.2 வாக்காளர் அடையாள அட்டையில் கதவு எண் 11/என் ஏ என்று உள்ளது என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.1 ஆதார் அடையாள அட்டையில் எனது பிறந்த தேதி 18.07.1956 என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 வாக்காளர் அடையாள அட்டையில் பிறந்த தேதி 1953 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பருவதம்மாள் 22.12.2018 ஆம் தேதியில் தான் இறந்தார் என்றால் சரிதான். பருவதம்மாளை கோவிந்தசாமி விவாகரத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்றதாக சொல்லும் தமிழ் தேதி என்னவென்றால் பங்குனி மாதம் 29 ஆம் நாள் ஆகும். எனக்கு திருமணம் நடந்ததாக சொல்லும் தேதிக்கு முன்பாகவே கோவிந்தசாமி பர்வதம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கோவிந்தசாமி மற்றும் பர்வதம்மாளுக்கு வாதி ஒருவர் மட்டுமே வாரிசு என்றால் சரிதான்.

11. நான் கோவிந்தசாமியை எந்த காலத்திலும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் கோவிந்தசாமியை நான் திருமணம் செய்து இருந்தால் அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும், திருமணம் செய்யாததால் தான் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்பதை கூட எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோவிந்தசாமி எழுதி வைத்ததாக சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால் நான் வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. கோவிந்தசாமிக்கு வாதி ராதாகிருஷ்ணன் மட்டுமே சட்டபூர்வமான வாரிசு என்றும், நான் எந்த வகையிலும் கோவிந்தசாமிக்கு வாரிசாக வரமாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரையில் வாதி கோவிந்தசாமிக்கு வாரிசாக வர மாட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லவே இல்லை. பி.வா.சா.ஆ.6 ஆட்சேபனை இல்லா கடிதம் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.05 18:13:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.